2015 பிப்ரவரி 20]

இதுவரை 24 கோடியே 41 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் வருவாய் ஈட்டியிருக்கின்றன. இதை யாரும், எந்த அரசியல் தலைவர்களும் சிந்திக்கவில்லை. ஏழையெளிய மக்களாக இருந்தாலும் சரி, மாநகராட்சியில் இருக்கின்ற சிறிய தெருக்களாக இருந்தாலும் சரி, சிறப்பான பேருந்து வசதிகளைப் பெற வேண்டும் என்பதற்காக மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதனை வழங்கியிருக்கின்றார்கள்.

முற்பகல் 10-55

அதேபோல், கிராமத்தில் இருக்கின்ற மற்ற பகுதிகளும் சிறப்பான பேருந்து வசதிகளைப் பெற வேண்டுமென்பதற்காக 1,136 புதிய வழித்தடங்களிலும், பேருந்துகளை வழங்கி இன்று அவை மக்கள் சேவையாற்றி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு முறை விண்ணப்பித்ததாகச் சொன்னார்கள். பல்வேறு முறை விண்ணப்பிக்கப்பட்ட அனைத்து மனுக்கள்மீதும் துறை சார்பாக நடவடிக்கை எடுத்து, வழித்தட நீட்டிப்புகள், புதிய பேருந்துகள் உள்ளிட்டவை முழுமையாக மக்கள் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு, உத்தரவோடு இயக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேலும் கூடுதலாகத் தேவையென்று சுட்டிக்காட்டியுள்ள வழித்தடங்களில், ஆய்வு செய்து பயணிகளுடைய அடர்வுகளுக்கு ஏற்ப அதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

39—

உயிரிம டீசல் உற்பத்தி

***28840—திரு. கார்த்திக் தொண்டைமான்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுற்றுச்சூழல் மாசுபடாத வகையில் வாகனங்களை இயக்குவதற்கு உயிர்ம டீசல் (Bio-Diesel) உற்பத்தி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) எல்லோர் வாழ்விலும் ஏற்றம் வேண்டும், எதிலும் வெற்றி வேண்டும் என்பதைத் தாரகமந்திரமாகக் கொண்டு செயல்படும் மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்பட்டு, இந்தியாவில் உள்ள 67 வேளாண்மைப் பல்கலைக்கழகங்களில் தலைசிறந்த பல்கலைக்கழகமாக விளங்கும், நமது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், உணவுக்குப் பயன்படாத தாவரங்களிலிருந்து கிடைக்கப்பெறும் எண்ணெய்யிலிருந்து சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தாத உயிர்ம டீசல் உற்பத்தி செய்வதற்குரிய ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது என்ற விவரத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.*

திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். இந்தியத் திருநாட்டிற்கே வழிகாட்டும்வகையில் உணவுக்குப் பயன்படாத எண்ணெய்யைக் கொண்டு ஆராய்ச்சிமூலம், சுற்றுச்சூழல் மாசுபடாத வகையில் உயிர்ம டீசலை மக்களின் பயன்பாட்டுக்குக் கொண்டுவர முற்படுகின்ற மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படுகின்ற நமது அரசுக்கும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் பணிவான வணக்கத்தையும், நன்றியையும் கூறிக்கொள்கிறேன்.*

2015 பிப்ரவரி 20]

மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்மூலம் என்ன ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, எத்தனால்மூலம் வாகனங்களை இயக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயிர்ம டீசல் (Bio-Diesel) என்று சொல்லக்கூடிய தாவர எண்ணெய், காட்டாமணக்கு (Jatropha Curcas), புங்கம் (Pongamia glabra), புன்னை (Calophyllum inophyllum), வேம்பு (Azadirachta indica), இலுப்பை (Bassia latifolia), சொர்க்க மரம் (Simarouba glauca) போன்ற தாவரங்களிலிருந்து கிடைக்கிறது. இந்த உயிர்ம டீசலானது தாவர எண்ணெயிலிருந்து Transesterification என்ற வேதியியல் முறையில் தயாரிக்கப்படுகிறது. உயிர்ம டீசலை உற்பத்தி செய்வது தொடர்பாக தற்போது சோதனை முறையில் ஆராய்ச்சிகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும், All India Co-ordinated Research Programme என்ற மத்திய அரசின் திட்ட முகமையோடும் கூட்டு முயற்சியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காட்டாமணக்கு எண்ணெய்யானது மெத்தனாலுடனும், கிரியா ஊக்கியுடனும் கலந்து தூய்மையாக்கப்பட்டு, சுத்திகரிக்கப்படுகிறது. தற்போது, ஆராய்ச்சியில் பயன்படுத்தப்படும் சுத்திகரிப்பு சாதனத்தின்மூலம் ஒரு நாளைக்கு சுமார் 250 லிட்டர், சுத்திகரிப்பு செய்ய முடியும். மேலும், எதிர்காலத்தில் இதன் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான வாய்ப்பும் பிரகாசமாக உள்ளது. இதனால், நம் நாட்டில் மிக அதிக அளவில் பயன்படுத்தப்படும் டீசல்மீது செலவிடப்படும் அந்நிய செலவாணியைக் குறைப்பதற்கு அதிக வாய்ப்புள்ளது. மேலும், டீசல் எஞ்சினை உயிர்ம டீசல் மற்றும் டீசல், 20:80 என்ற விகிதத்தில் பயன்படுத்தி தற்போது உள்ள எஞ்சினை எந்த மாறுபாடும் செய்யாமல், இயக்கிப் பயன் பெறலாம். இதுதவிர, இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன்மூலம் கிராமங்களில் வேலைவாய்ப்பையும் அதிகரிக்க முடியும். இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி

வணிகரீதியில் அதிக அளவில் உயிர்ம டீசலை உற்பத்தி செய்யவும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தொடர்ந்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திடமிருந்து இது தொடர்பான ஆராய்ச்சி முடிவுகள் பெறப்பட்டபின், இன்முகத்தால், ஈகை குணத்தால், தமிழினத்தை இமையாகக் காக்கும் தாயாய், பெரியாரின் துணிவாய், பேரறிஞரின் அறிவாய், மக்கள் திலகத்தின் கனிவாய், மாநிலத்தை மகத்தாக வழிநடத்தும் மாதரசி, மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச்செல்லப்பட்டு, அனுமதி பெற்ற பின்னர் சுற்றுச்சூழல் மாசுபடாத வகையில் உயிர்ம டீசலைப் பயன்படுத்துவது தொடர்பாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.*

திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*